செ.வெ.எண்: 48 நாள்: 28.12.17

# பத்திரிக்கைச் செய்தி

அனைவருக்கும் கல்வி இயக்கம், கடலூர் மாவட்டம் சார்பில் பண்ருட்டி மற்றும் நல்லூர் ஒன்றியத்திற்குட்பட்ட காடாம்புலியூர் மற்றும் பெரிய நெசலூரில் செயல்பட்டு வரும் **கஸ்தூர்பா காந்தி பாலிகா வித்யாலயா உண்டு உறைவிடப்பள்ளியை (KGBV) பொறுப்பேற்று 2017-18 ஆம் ஆண்டிலிருந்து நடத்துவதற்கு** பதிவு பெற்ற தகுதி வாய்ந்த அரசு சாரா தன்னார்வ தொண்டு நிறுவனங்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. * **தகுதி வாய்ந்த விண்ணப்பத்தாரர்கள் மட்டுமே தேர்ந்தெடுக்கப்படுவர்.**

விண்ணப்பங்கள் வழங்கப்படும் நாட்கள் : 29.12.2017 **முதல்** 04.01.2018 **வரை**
(காலை 10.00 மணி முதல் மாலை 5.45 மணி வரை)

பூர்த்தி செய்த விண்ணப்பங்களை
ஒப்படைக்க கடைசி நாள் : 04.01.2018 **அன்று மாலை 5.45 மணி வரை**

* **நிபந்தனைகள் :**

**தொண்டு நிறுவனர் கீழ்காணும் குறைந்தபட்ச தகுதிகளை பெற்றிருக்க வேண்டும்.**

- ➢ **தொண்டு நிறுவனங்கள்** Society Act/Trust Act-**ன் கீழ் கண்டிப்பாக பதிவு செய்திருக்க வேண்டும். அப்பதிவு அவ்வப்போது புனரமைப்பு** (Renewal) **செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.**
- ➢ **தமிழக/மத்திய அரசால் நீக்கம் செய்யப்பட்ட** (Cancelled /Black listed NGOs)**தொண்டு நிறுவனங்கள் விண்ணப்பிக்கக் கூடாது.**
- ➢ **தொண்டு நிறுவனங்கள் அந்நிறுவனத்தின் பெயரில்** 80G (or) 12AA exemption **சான்றிதழ் பெற்றிருக்க வேண்டும்.**
- ➢ **தொண்டு நிறுவனங்கள் கட்டாயமாக அந்நிறுவனத்தின் பெயரில்** PAN card **வைத்திருக்க வேண்டும்.**

***விண்ணப்பப் படிவங்கள் பெறுதல் மற்றும் சமர்ப்பிக்கப்பட வேண்டிய அலுவலகம்:***

*கூடுதல் முதன்மைக் கல்வி அலுவலர்,*
*அனைவருக்கும் கல்வி இயக்கம், (SSA),*
*அரசு மேல்நிலைப்பள்ளி வளாகம், மஞ்சகுப்பம்,*
*கடலூர் மாவட்டம். 607 001.*

**மாவட்ட ஆட்சியர்,**
கடலூர் மாவட்டம்.

வெளியீடு:- செ.ம.தொ.அ.
கடலூர்.

28/12/17.